**தொழில்நுட்பவியல் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2021**

---

தொழில்நுட்பவியல் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 ஒக்தோபர் 20 ஆம் திகதிய உதவியாளர் ஆவணத்தின் (Aide Memoire) 10 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. இலங்கையில் தற்போதுள்ள இடைநிலைக் கல்வி முறைமையின் திறனை வலுப்படுத்துவதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் செயற்பாடுகள் சிவில் பணிகள், உபகரணங்கள், தளபாடங்கள், திறன் அபிவிருத்தி எனும் பெயர்களில் உள்ளன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,287.1 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60.70 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,650 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் தொகை சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,637.1 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2025 மார்ச் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை, செலவுக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரிவு 69 இன் பிரகாரம், ஓர் சொத்தானது பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னரே ஓர் பெறுமானத் தேய்விடக்கூடிய சொத்தாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 201.18 மில்லியன் தொகையான நடைமுறை வேலையின் கிரயமானது ஆதணம் பொறி மற்றும் உபகரணமாக கணக்கிடப்பட்டிருந்தது. | 201.18 | உடன்படுகின்றோம் மேலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குக. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போதான வேலை ஆரம்பிப்பு முற்பணம் ரூபா 65.49 மில்லியன் ஆகும். இருப்பினும், வேலை ஆரம்பிப்பு முற்பணம் மீது ஏற்புடைய பெ.சே.வ (VAT) ரூபா 5.24 மில்லியனானது கணக்கிடப்படவில்லை. அதன் பெறுபேறாக, செலுத்த வேண்டிய பெ.சே.வ (VAT) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றில் ரூபா 5.24 மில்லியனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | 5.24 | இத் தொகையினை செலுத்த வேண்டிய பெ.சே.வ (VAT) ஆக காட்ட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய பெ.சே.வ (VAT) சரியாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | ரூபா 30.43 மில்லியன் தொகையான அத்தாட்சிப்படுத்தப்பட்ட | 32.88 | உரிய பெ.சே.வ (VAT) கொடுப்பனவு பட்டியல்கள் கூட செலுத்த | அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டியல்களின் பெறுமதி மற்றும் பெ.சே.வ |

| | | |
|---|---|---|
| பட்டியல்கள் மற்றும் ரூபா 2.45 மில்லியன் பெறுமதி சேர் வரி என்பன கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, மீளாய்வாண்டிற்கான மிகுதி நடைமுறை வேலை மற்றும் செலுத்த வேண்டிய பெ.சே.வ (VAT) என்பன ரூபா 32.88 மில்லியனினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | வேண்டியவையாக காட்டப்பட்டிருக்கவில்லை. | (VAT) தொகை என்பன சரியாக கணக்கிடப்படல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை / கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி மற்றும் அமுல்படுத்தல் முகவர்கள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு ஆகிய இருதரப்பு ஒப்பந்தத்தின் (உதவியாளர் ஆவண அறிக்கை) 12 ஆம் பந்தி என்பனவற்றின் பிரகாரம். | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் குறைந்தபட்சம் 2 மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 2021 செப்தம்பர் 7 மற்றும் 2021 திசெம்பர் 03 ஆகிய தினங்களில் இரண்டு குழுக் கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | 2021 இல் கொவிட் 19 நோய்த்தொற்று காலப்பகுதியின் போது, கூட்டங்களின் எண்ணிக்கை இரண்டு அமர்வுகளாக வரையறுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை நிபந்தனையுடன் இணங்குக. |
| (ஆ) | செயற்திட் உதவியாளர் ஆவணத்தின் கண்காணிப்புத் திட்டத்தின் 10 ஆம் பந்தி | நிகழ்ச்சித்திட்டத்தின் சார்பாக செய்யப்படும் செலவினங்கள் உள்ளடங்களாக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்று வருடாந்த அடிப்படையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2024 ஒக்டோபர் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2021 இல், பிரிவு கலைக்கப்பட்டது, மேலும் அதன் பொறுப்புக்கள் அமைச்சிற்கு மாற்றப்பட்டது. அதன் பெறுபேறாக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு தாமதமடைந்திருந்தது. | இருதரப்பு ஒப்பந்தத்துடன் (உதவியாளர் ஆவணம்) இணங்குக. |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| | செயற்பாடு | 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | | | |
| (அ) | தொழிநுட்ப ஆய்வுகூடங்களின் திருத்தம். | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 62.61 மில்லியன் கொண்ட 15 தொழிநுட்ப ஆய்வுகூடங்களானது திருத்தம் செய்யப்படல் வேண்டும். | 5 ஆய்வுகூடங்களிற்காக விலைமனு ஆவணங்களின் தயாரிப்பு மற்றும் 7 ஆய்வுகூடங்களிற்காக மதிப்பீடு தயாரிப்பு போன்றன மாத்திரமே செய்யப்பட்டிருந்தன. | 15 தொழிநுட்ப ஆய்வுகூடங்கள் திட்டமிடப்பட்டபடி திருத்தப்படவிடல்லை. | மாகாண திணைக்களம் வெவ்வேறு காலப்பகுதிகளில் அவர்களின் பெறுகை செயன்முறையினை மேற்கொள்வதனால். | பெறுகை செயன்முறைகள் மாகாண கல்வித் திணைக்களத்தினால் செய்யப்படுகின்றது. | வழங்கப்பட்ட காலத்திற்குள் செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பொறியியல் தொழிநுட்ப உபகரணம், பௌதீக முறைமை தொழிநுட்ப உபகரணம் மற்றும் தளபாடங்கள். | 36 புதிய தொழிநுட்ப கட்டிடங்கள் மற்றும் 15 புனரமைக்கப்பட்ட தொழிநுட்ப கட்டிடங்கள் என்பனவற்றிற்காக பொறியியல் தொழிநுட்ப உபகரணம், பௌதீக முறைமை தொழிநுட்ப உபகரணம் மற்றும் தளபாடங்கள் என்பனவற்றை கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. | எவ்வித செயலாற்றலும் அடையப்பெறவில்லை. | பெறுகை வேலைகளில் எவ்வித செயலாற்றலும் அடையப்பெறவில்லை. | கட்டிடங்கள் நிர்மானிக்கப்படாததன் காரணமாக. | கூற்றுடன் உடன்பட்டனர். | கட்டிடங்களின் நிர்மானமானது குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள் செய்யப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 தொழிநுட்ப ஆய்வுகூட கட்டிடங்களின் நிர்மானத்தினை நிறுத்தியதனால் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக மொத்த ஒப்பந்த பெறுமதியானது ரூபா 323.5 மில்லியனிலிருந்து ரூபா 598 மில்லியன் வரை 85 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | தொழில்வழங்குனரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வெளியக பொருளாதார நிலைமைகள் காரணமாக குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டது. | மேலதிக செலவுகள் இல்லாமல் வேலைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஜுலை தொடக்கம் 2022 செப்தம்பர் வரை தொழிநுட்ப கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் சிவில் வேலைகள் மீது கூட்டு மொத்தம் ரூபா 1,943.10 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது, மேலும் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்வதற்கான அதிகாரமானது மாகாண பொறியியலாளர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அதிகபட்ச பொருளாதார நன்மைகளுடன் உரிய நேரத்தில் இந் நிர்மான வேலைகளின் பூர்த்தியாக்களினை கண்கானிக்க ஓர் பொறிமுறை கல்வி அமைச்சினால் நிறுவப்படாததனால், செயற்திட்டத்தின் நோக்கங்கள் உரிய மட்டத்தில் அடையப்பட்டமையினை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | கொவிட் நோய்த்தொற்று நிலமையினால் ஏற்பட்ட சவால்கள் காரணமாக திட்டத்தினை தொடர்ந்து முன்னெடுப்பது கடினமாக காணப்பட்டது. | மாகாண செயற்பாடுகளை கண்கானிக்க ஓர் வலுவான பொறிமுறையினை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட ஐந்தொகையிலுள்ள பெறுமதிகளை திறைசேரியின் ஐந்தொகையிலுள்ள பெறுமதி, பொறுப்புடைய உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்பு கைச்சாத்துக்கள் என்பனவற்றுடன் ஒப்பிடும் போது அடையாளம் கானப்பட்ட சீராக்கங்களானது பேரேட்டு கணக்குகளில் தயாரிக்கப்பட்டு பதிவு செய்யப்படல் வேண்டும், ஆனால் இவைகள் அதன்படி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, நாட்குறிப்புப் பதிவுகளுடன் தொடர்புபட்ட நாட்குறிப்பு மற்றும் நாட்குறிப்பு கைச்சாத்துக்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் இது கணக்காய்வின் நோக்கெல்லையினை வரையறுக்கின்றது. | செயற்திட்டத்தின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தினூடாக கணக்கிடப்பட்டதனால், பேரேட்டு கணக்குகள் அல்லது நாட்குறிப்பு பதிவுகள் பராமரிக்கப்படவில்லை. | பிரதான நாட்குறிப்பு மற்றும் நாட்குறிப்பு கைச்சாத்துக்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |